# தூத்துக்குடி மாநகராட்சி

## சாதாரண கூட்டப் பொருள்

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதி எண் 156(1) கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

<table>
<tr><th>மாமன்ற கூட்ட தேதி</th><th>மாமன்ற தீர்மானம்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>29.11.2024</td><td>1) தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட தெற்கு மண்டலம் வார்டு எண் 60 துறைமுக விரைவு சாலை (திருச்செந்தூர் மெயின் ரோடு) பகுதியில் புதிதாக திருச்செந்தூர் செல்லும் நடை பயண பக்தர்களுக்கான ஓய்விடப் பூங்கா (கட்டண இல்லா தங்கும் இடம், குளியலறை, கழிப்பிட வசதிகளுடன்) கட்டப்பட்டுள்ளது. இப்பூங்காவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு இம்மாநகராட்சி வருவாயை பெருக்கும் வகையில் மேற்படி இடத்தில் கட்டப்பட்டுள்ள நான்கு கடைகளை ஏலம் (ம) ஒப்பந்தபுள்ளி கோரும் நடவடிக்கைகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>அ16/4508/2024</td><td>544) அலுவலகக் குறிப்பு மேற்படி நான்கு கடைகளை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரும் நடவடிக்கைகள் அனுமதிக்கப்படுகிறது</td></tr>
<tr><td></td><td>2) தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகத்தில் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளும், JCB வாகனத்திற்கு ஓட்டுநர் இல்லாததாலும், மேலும் உரக்கிடங்கில் இயங்கும் JCB வாகனத்திற்கு ஓட்டுநர் இல்லாததாலும், பணிகள் மேற்கொள்ளுவதில் சிரமமாக உள்ளதால், மேற்படி இரண்டு JCB வாகனங்களுக்கும் தற்காலிகமாக நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலி விகிதத்தில் ஈடுபடுத்தி (செப்டம்பர் 2024 முதல் மார்ச் 2025 வரை) அதற்கான ஊதியத்தினை பொது நிதியில் இருந்து வழங்கவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.2.88 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பதவி</th><th>பணியாளர் எண்ணிக்கை</th><th>ஒரு நாள் ஊதியம் (ரூ.)</th><th>மன்ற அனுமதி தேவைப்படும் கால அளவு</th><th>உத்தேச செலவினம் (ரூ.)</th></tr>
<tr><td>4</td><td>J C B ஓட்டுனர் (ரூ.778/–)</td><td>2</td><td>778</td><td>26.096.2024 முதல் 31.03.2025 முடிய</td><td>288000</td></tr>
<tr><td colspan="5">மொத்தம்</td><td>288000</td></tr>
</table></td><td>545)அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | எனவே மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு பொது சுகாதார நலன் கருதி நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் தற்காலிகமாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2022–23 செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ள தினக்கூலி ஊதிய விகிதப்படி பணியமர்த்தப்பட்ட பணியாளருக்கு உத்தேச ஊதியம் தொகை ரூ.2.88 இலட்சம் 2 % சேவை வரியுடன் சேர்த்து நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மாண்புமிகு மேயர் அவர்களால் வழங்கப்பட்ட முன்அனுமதி மாமன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு மேற்படி 2 பணியாளருக்கு ஊதியம் தொகை நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் 26.09.2024 முதல் 31.03.2025 முடிய மாவட்ட ஆட்சித்தலைவர் செயல்முறை ஆணை 2022–23ன்படி மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஊதியம் வழங்கிட ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.2.88 க்கும், மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதியினை மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>எச்1–1240–2024 | |
| | 3) தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட சாலையோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம் பாதுகாத்தல் மற்றும் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்கு படுத்துதல் திட்டம் மற்றும் விதிகள் 2015, விதி 12(1)ன் கீழ் 04.10.2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் மாநகராட்சி ஆணையர், மாண்புமிகு மேயர், துணை ஆணையர், செயற்பொறியாளர் திட்டம், மாநகர காவல் கண்காணிப்பாளர், சார் ஆய்வாளர் போக்குவரத்து காவல் துறை, வியாபாரிகள் ஐக்கிய சங்கம், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சாலையோர வியாபாரிகளில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட ஆறு உறுப்பினர்கள் கலந்து கொண்டு எடுக்கப்பட்ட கூட்ட நடவடிக்கைகளின் விபரமாவது.<br>**முழு நேரம் அனுமதிக்கப்பட்ட சாலையோர விற்பனை மண்டல பகுதிகள்**<br>**மேற்கு மண்டலம்**<br>1. தமிழ் சாலை (ராஜாஜி பூங்கா முன்புறம்)<br>2. சிதம்பர நகர் ரோடு (பிரையண்ட் நகர் மேற்கு மெயின்ரோடு)<br>3. பண்டுக்கரை சாலை<br>**வடக்கு மண்டலம்**<br>1. பூபாலராயர் புரம் (மார்க்கெட் பகுதி)<br>**தெற்கு மண்டலம்**<br>1. ஹார்பர் கன்ஸ்ட்ரக்ஷன் ரோடு (துங்கம்மாள்புரம்)<br><br>**பகுதி நேரம் அனுமதிக்கப்பட்ட சாலையோர விற்பனை மண்டல பகுதிகள்**<br>**கிழக்கு மண்டலம்**<br>1. பீச் ரோடு (மாதா கோவில் முன்பு)<br>2. வடக்கு பீச் ரோடு (இந்திரா காந்தி சிலை அருகில்)<br>**வடக்கு மண்டலம்**<br>1. ஹவுசிங் போர்டு சர்விஸ் ரோடு (வெங்கடேஸ்வரா காபி ஸ்டால்)<br>2. எட்டையாபுரம் ரோடு (இசக்கியம்மன் கோவில் எதிர்புறம்)<br>**மேற்கு மண்டலம்**<br>1. தமிழ்சாலை (மையவாடி எதிர்புறம்)<br>2. டுவிபுரம் மெயின் ரோடு<br>**அனுமதிக்கப்படாத சாலையோர விற்பனை மண்டல பகுதிகள்**<br>**கிழக்கு மண்டலம்** | 546)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1. தமிழ் சாலை (மாநகராட்சி அலுவலகம் முன்பு)<br>2. தமிழ் சாலை (பேருந்து நிலையம் முன்பு)<br>3. வ.உ.சி. சாலை (மாநகராட்சி அலுவலகம் முன்) மற்றும் விருந்தினர் மாளிகை முன்பு<br>4. பழைய துறை முகம் மற்றும் ரயில்வே நிலையம்<br>5. வி இ ரோடு, பீச் ரோடு முதல் டி எச் எப் பிளாசா வரை<br>6. சிவன் கோயில் தெரு<br>**மேற்கு மண்டலம்**<br>1. தமிழ்சாலை காவல் நிலையம் முன்பு<br>**வடக்கு மண்டலம்**<br>எட்டையாபுரம் ரோடு புதிய பேருந்து நிலையம்<br>**விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்**<br>1. ஒரு சாலையில் விற்பனை அனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.<br>2. சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல் துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.<br>3. வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.<br>**சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களின்**<br>1. அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்.<br>2. இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு.<br>3. பண்டைய நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல் பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.<br>4. எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு.<br>5. பாதுகாப்பு கோணத்தில் தடை செயப்பட்ட எந்த பகுதியிலும்.<br>எனவே மேற்கண்ட விபரப்படியான சாலையோர விற்பனை மண்டல பகுதிகளில், முழு நேரம் மற்றும் பகுதி நேரம், அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் சாலையோர வியாபார ஒழங்குப்படுத்துதல் திட்டம் மற்றும் விதிகள் 2015கின் கீழ் சாலை ஓர வியாபாரம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்<br>எச்1 /8574/2021 | |
| | **4)** தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் இருந்து முதியோர் உதவித்தொகை பெறும் பொருட்டு வரப்பெற்ற 7 விண்ணப்பங்கள் முதியோர் உதவித்தொகை பெறுவதற்கு தகுதி உடையதாக உள்ளதால் அதற்குரிய வறுமைக்கோடு குறியீட்டு தரம் நிர்ணயம் செய்யப்பட்டு கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு இம்மாநகராட்சியின் சமுதாய அமைப்பாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு, | 547) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| வ.என் | வார்டு/பகுதி/கோட்டம் எண். | தெரு பெயர்/ குடிசை பகுதி/ சிற்றூர் | கதவு எண் | குடிசை பகுதியின் அங்கீகரிக்கப்பட்டது/ அங்கீகரிக்கப்படாதது | குடும்பத் தலைவரின் பெயர்/ பெண் குடும்பத் தலைவியாயின் அடிக்கோடிடுக | தகப்பனார் / கணவர் பெயர் | வறுமை கோட்டிற்கு கீழ் இருப்பின் கோல் மற்றும் அம்சங்கள் அடிப்படையிலான சராசரி | முன்னுரிமை தன்மை I/II/III/IV/V |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** |
| 1 | 37 | தாமோதர நகர் | 23 | ஆம் | மரகதவேல் | ராஜரத்தினம் | 76 | II |
| 2 | 7 | கலைஞர் நகர் தெரு | 5/113 | ஆம் | பீனா | ரத்தினம் | 90 | I |
| 3 | 11 | சக்தி விநாயகர்புரம் | 111/66/50F | ஆம் | குருநாதன் | காசி | 86 | I |
| 4 | 22 | அழகேசபுரம் மெயின் | 380A | ஆம் | ஆறுமுகம் | சண்முகம் | 78 | II |
| 5 | 29 | மீனாட்சிபுரம் 4வது தெரு (கி) | 53E | ஆம் | ராஜரத்தினம் | சண்முகம் | 80 | I |
| 6 | 59 | எம்.தங்கம்மாள்புரம் | 6 | ஆம் | அன்னபூரணி | பெருமாள் | 88 | I |
| 7 | 52 | சுந்தர் நகர் 5வது தெரு | 4/231-10 | ஆம் | வேம்பு | மாடசாமி | 90 | I |

மேற்படி பட்டியலில் கண்டுள்ள நபர்களை வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகள் என பயனாளிகள் பட்டியலில் பதிவு மேற்கொள்ள

| | | |
|---|---|---|
| | மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு.** மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>எச்1/19368/2010 | |
| | 5) இம்மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் (திட்டம்), வடக்கு மண்டலம் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு, இவ்வலுவலக TN69 P 9905 வாகனம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்தினை இயக்குவதற்கு, நிரந்தர வாகன ஓட்டுநர் இல்லாத காரணத்தினால், நகர்ப்புற வாழ்வாதார மையம் மூலம் (CLC) Light Duty Driver 1 நபரை 14.11.2024 முதல் 31.03.2025 வரையில் 5 மாத காலத்திற்கு, 2023–24ம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி ரூ.551/– வீதம் ஐந்த மாத காலத்திற்கு உதவிசெயற்பொறியாளர் (திட்டம்) அவர்களின் வாகனத்தை இயக்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.78,000/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு: 1. மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.<br><br>இ5/3725/2022 | 548)அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப் பட்டது<br>2.அங்கீகரிக்கப் பட்டது. |
| | 6) இம்மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் , மற்றும் மாநகர பகுதிகளில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக் தொட்டிகள் ஆகியவற்றின் குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் நகர்புற வாழ்வாதார மையத்தின் (City livelihood centre) மூலம் District collector Ápproved rate 2022 2023ம் ஆண்டின் அடிப்படையில் தற்காலிக பணிாளர்களை மாமன்ற தீர்மான எண் 442 நாள் 28.06.2024 ன் படி தினக்கூலி பணியாளர் 69 நபர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.<br>இந்நிலையில் மேற்கு மண்டலத்தில் போதிய வால்வு திருப்புநர்கள் இல்லாத காரணத்தினால் வால்வுகளை இயக்கி பராமரிப்பு செய்திட வால்வு ஆப்ரேட்டர் 1 நபரை நகர்புற வாழ்வாதார மையம் மூலம் 1.10.2024 முதல் 31.03.2025 வரை 6 மாத காலத்திற்கு பணியமர்திடவும் அதற்கான உத்தேச செலவின தொகையான ரூ. 1.62 இலட்சத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் செலவு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>3874/இ3/2018 | 549)அலுவலகக் குறிப்பு<br>அனுமதிக்கப் பட்டது. |
| | 7) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் பொதுநிதி திட்டம் 2023–24 கீழ் நான்கு மண்டலங்களுக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு செய்திடும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு M/S.சுதா இன்ஜினியரிங் , தூத்துக்குடி நிறுவனத்தாருக்கு 16.11.2023 முதல் 15.11.2024 வரையிலான காலங்களுக்கு பணி மேற்கொள்ள 27.07.2023ம் தேதிய 345ஆம் தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி நிறுவனத்தாரின் ஒப்பந்த காலமானது 15.11.2024 உடன் முடிவடைகின்றது. எனவே மேற்படி பணியினை பழைய விலை விகிதத்தின் அடிப்படையில் 16.11.2024 முதல் 15.12.2024 வரை ஒரு மாத காலத்திற்கு ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்ட பழைய விலை விகிதத்தின் படி ரூ.8.25/– இலட்சத்திற்கு தற்காலிகமாக தெருவிளக்குகளை | 550)அலுவலகக் குறிப்பு<br>1.அனுமதிக்கப் பட்டது.<br>2.ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இயக்கி பராமரிக்கும் பணியினை மேற்கொள்ளும் M/S.சுதா இன்ஜினியரிங் , தூத்துக்குடி நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :<br>1. மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுமக்களின் அடிப்படை அத்தியாவசிய தெருவிளக்கு பணியின் அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்ட பழைய விலை விகிதத்தின் படி ரூ.8.25/– இலட்சத்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>இ3/3196/2023 | |
| | 8) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொதுநிதிதிட்டம் 2024–25ன்கீழ் தூத்துக்குடி மாநகராட்சி மாநாட்டுமையம் (Convention Centre) தரை தளத்தில் குளிர்சாதனம் வசதி ஏற்படுத்தும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி 15.11.2024 அன்று கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளி உறை15.11.2024 அன்று 3.30 மணிக்குதிறக்கப்பட்டது.<br>1. M/s. IJ Construction, Thoothukudi – நிறுவனம் மதிப்பீட்டைவிட 0.21 % குறைவு(ரூ.50,11,837.50)<br>2. M/s. SM Thomaiyar& Son, Thoothukudi – நிறுவனம் மதிப்பீட்டைவிட 0.50% அதிகம் (ரூ.50,47,279.50)<br>3. M/s.YUDEK Engineering Private Limited, Chennai – நிறுவனம் புள்ளிகளில் மதிப்பீட்டைவிட0.21% குறைவான தொகை ரூ.50,11,837.50 (GST நீங்கலாக) கொடுத்துள்ள M/s.IJ Construction, Thoothukudi, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றஅனுமதி வேண்டப்படுகிறது. மதிப்பீட்டைவிட14.07% அதிகம் (ரூ.57,28,873.00) வரப்பட்ட மூன்று ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீட்டைவிட0.21% குறைவான தொகை ரூ.50,11,837.50 (GST நீங்கலாக) கொடுத்துள்ள M/s.IJ Construction, Thoothukudi, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றஅனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1. M/s.IJ Construction, Thoothukudi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மதிப்பீட்டைவிட0.21% குறைவாக கொடுத்துள்ள M/s.IJ Construction, Thoothukudi நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ3/4217/2024 | 551)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது. |
| | 9) தூத்துக்குடி மாநகராட்சியில் ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் தொடர்பாக ஒப்பந்ததாரரிடமிருந்து விண்ணப்பத்துடன் முறையான ஆவணங்கள் பெறப்பட்டு, அதனடிப்படையில் ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகிறது. மேலும், ஒப்பந்ததாரர் பதிவு புதுப்பித்தல் | 552)அலுவலகக் குறிப்பு இணையதளம் வாயிலாக ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் |

நடைமுறையானது ஒவ்வொரு ஆண்டும் ஒப்பந்ததாரிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டு அதனடிப்படையில் ஒப்பந்ததாரர் பதிவு புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பொதுப்பணித்துறை அரசாணை எண் 195, நாள் 14.12.2021ல் ,ஒப்பந்ததாரர் பதிவு ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பித்தல் என்பதிலிருந்து மூன்றான்டுகளுக்கு ஒரு முறை என மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளுக்கான பண வரம்புகள் கீழ்க்கண்டவாறு திருத்தி ஆணையிடப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:–

| Sl.No | Class | Existing Monetary Limit (As per G.O.(MS) No.222, Public Works (G2) Department, dated 08/04/1999) | Revised Monetary Limit |
|---|---|---|---|
| 1 | Class I | Above Rs.75.00 Lakh | Above Rs.10.00 Crore |
| 2 | Class II | Upto Rs.75.00 Lakh | From Rs.5.00 Crore to Rs.10.00 Crore |
| 3 | Class III | Upto Rs.30.00 Lakh | From Rs.2.00 Crore to Rs.5.00 Crore |
| 4 | Class IV | Upto Rs.15.00 Lakh | From Rs.50 Lakh to Rs.2.00 Crore |
| 5 | Class V | Upto Rs.6.00 Lakh | Up to Rs.50 Lakh |

மேலும், நிதித்துறை அரசாணை எண் 83, நாள் 26.02.2024ல் 01.07.2024 முதல் அனைத்து துறையிலும் ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் நடைமுறைகள் மின்னனு முறையில் **இசேவை மையம்** மூலம் மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் மேற்கண்ட அரசாணைகளின் படி, ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் பணிகளை மாநகராட்சி மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் தொடர்பான பணிகளை இணையதளம் வாயிலாக மேற்கொள்ள தமிழ்நாடு மின் அளுமை முகமை மூலம் பிரத்தேக இணையதளம் வடிவமைக்கப்பட்டு ஒவ்வொரு துறைக்கும் பயனர் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி தூத்துக்குடி மாநகராட்சிக்கு ஒப்பந்ததாரர் பதிவு மற்றும் புதுப்பித்தல் விண்ணப்பங்களை மின்னனு முறையில் விண்ணப்பம் பெற்று உரிய தொடர்நடவடிக்கை இணையதளம் வாயிலாக

விண்ணப்பதினை செயல்படுத்த அனுமதிக்கப் பட்டது.

| | | |
|---|---|---|
| | செயல்படுத்தப்படவுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மாமன்றம் பதிவு செய்யலாம்<br>ந.எண் இ1/4481/2024 | |
| | 10) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – குடிநீர் மற்றும் வடிகால்நிதிதிட்டம் 2024–25ன்கீழ்கிழக்கு மண்டலம் வார்டு எண் 41 மீனவர் காலனிZone 15, DMA-I ல் குடிநீர் பகிர்மானகுழாய் இணைப்பிற்காக HDPE குழாய் மற்றும் DIகுழாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி 15.11.2024 அன்று கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளிஉறை15.11.2024 அன்று 3.30 மணிக்குதிறக்கப்பட்டது.<br>1. M/s. IJ Construction, Thoothukudi – நிறுவனம்<br>மதிப்பீட்டைவிட 0.20% குறைவு(ரூ.33,28,348.45)<br>2. M/s. SM Thomaiyar& Son, Thoothukudi – நிறுவனம்<br>மதிப்பீட்டைவிட 0.50% அதிகம் (ரூ.33,51,771.50)<br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட0.20% குறைவான தொகை ரூ.33,28,348.45 (GST நீங்கலாக) கொடுத்துள்ள M/s.IJ Construction, Thoothukudi, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதிவேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1. M/s.IJ Construction, Thoothukudi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மதிப்பீட்டைவிட0.20% குறைவாக கொடுத்துள்ள M/s.IJ Construction, Thoothukudi நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/3743/2024 | 553)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது. |
| | 11. அரசாணை எண் 27, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 22.02.2023ன் பிரகாரம் தூத்துக்குடி மாநகராட்சியில் மழைநீர் வடிகால் பணிகளை உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2022–2023ன் கீழ் மேற்கொள்ள ரூ.4900.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது.<br>சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண் 18688/2022/TP1, நாள் 11.07.2022ன் படி உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 2022–2023ன் கீழ் மழைநீர் வடிகால் பணிகள் மொத்தம் 43.507 கி.மீ நீளத்திற்கு அமைக்கும் பணிக்கு ரூ.4519.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து தலைமைப்பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனரகம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 001/2022/DO1 , நாள் 19.07.2022ன் படி மேற்படி மழைநீர் வடிகால் பணிகள் 8 சிப்பங்களாக | 554)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

ரூ.4255.00 கோடிக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது. தற்போது மேற்படி பணிகள் அனைத்தும் முடிவுற்றுள்ளது.

மேற்படி மழைநீர் வடிகால் பணிகளில் கீழ்க்கண்ட சிப்ப பணிகளுக்கு 01.01.2022 முதல் கூடுதலாக 6 சதவீதம் ஜி.எஸ்.டி வழங்கப்பட்டதன் காரணமாக மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாக செலவினம் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | சிப்பம் எண் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | செலவினம் (ரூ.இலட்சத்தில்) | கூடுதல் செலவினம் (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 6 | 480.00 | 486.00 | 6.00 |
| 2 | 1 | 572.00 | 582.07 | 10.07 |
| 3 | 3 | 502.00 | 530.15 | 28.15 |
| **மொத்தம்** | | **1554.00** | **1598.22** | **44.22** |

மேற்படி மழைநீர் வடிகால் பணிக்கு அரசாணையின் பிரகாரம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.4900.00 இலட்சத்தில், ரூ.4255.00 கோடிக்கு மழைநீர் வடிகால் பணிகள் எடுக்கப்பட்டுள்ளது போக மீதமுள்ள தொகை ரூ.645.00 இலட்சம் சேமிப்பு தொகையாக உள்ளது. எனவே, மேற்படி சிப்ப பணிகளில் கூடுதலாக வரும் தொகை ரூ.44.22 இலட்சத்தினை மேற்படி திட்டப்பணியின் சேமிப்பு நிதியில் இருந்து ஈடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்

இ1 / 1526 / 2022

555)அலுவலகக் குறிப்பு வைப்புத் தொகை ரூ.51,444/—ஐ திரும்ப வழங்க அனுமதிக்கப் பட்டது.

12) தூத்துக்குடி மாநகராட்சிக்குப்பாத்தியப்பட்ட தெற்கு காட்டன் சாலையில் உள்ள மாநகராட்சி வணிக வளாகத்தில் உள்ள கடை எண்.4க்கு குத்தகைதாரர் திரு.சி.த.செல்லப்பாண்டியன் செலுத்திய 12 மாத வாடகை காப்பு வைப்புத்தொகையை திரும்ப வழங்க கோரியுள்ளார்,அதன் விபரங்கள் கீழ்கண்டவாறு பட்டியலிடப் பட்டுள்ளது.

| No | Receipt No | Shop No/Area | Payment Date | Amount |
|---|---|---|---|---|
| 1. | 1608311 | 4/South Cotton Road | 27.02.2017 | 51,444/- |

தெற்கு காட்டன் ரோடு வணிக வளாகம் முழுவதும் இடிக்கப்பட்டு புதியதாக வணிக வளாகம் கட்டப்பட்டு பணிகள் முடிவு பெற்றுள்ளது, இவ்வணிக வளாகத்தில் ஏற்கனவே கடை எண்.04 உரிமம் பெற்று திரு.சி.த.செல்லப்பாண்டியன் என்பவர் ஏப்ரல் 2021ம் மாதம் வரை கடை வாடகை நிலுவையின்றி மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்துள்ளார்.

| | | |
|---|---|---|
| | இந்நிலையில் அன்னார் மேற்படி கடைக்கு செலுத்திய 12 மாத வாடகை ரூ.51,444/-யை காலம் கடந்த வைப்புத்தொகைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதால் மேற்படி முன்வைப்புத்தொகையை கடை உரிமம்தாரர் திரு.சி.த.செல்லப்பாண்டியன் என்பவருக்கு வழங்கிட மாமன்றஅனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : திரு. சி.த.செல்லப்பாண்டியன் குத்தகைதாரர் என்பவர் பட்டியலில் கண்டுள்ள கடை எண்.4க்கு 12 மாத வாடகை காப்பு வைப்புத்தொகையாக செலுத்தியுள்ளார், ஏப்ரல்/2021 கடையை காலி செய்து செலுத்திய காப்பு வைப்பு தொகையை திரும்ப வழங்க கோரியுள்ளார் மேற்படி கடைக்கு வாடகை நிலுவையின்றி செலுத்தியுள்ளார் என அ16 உதவியாளர் அறிக்கையை ஏற்று காலங்கடந்த வைப்பு தொகை கணக்கில் கொண்டு செல்லப்பட்ட வைப்பு தொகை ரூ.51,444/-யை திரும்ப வழங்கலாம்.<br>அ16/2700/2016 | |
| | 13) தூத்துக்குடி மாநகராட்சி சங்கரப்பேரி கிராமம் சர்வே எண்கள். 233/1D,344/1B,344/2B,344/3A2, 345/1,2ல் 18290 ச.மீ (4.52 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் மனுதாரர் திரு.P.அரிசந்திரன் , P.பாரிமன்னன் அவர்களின் குடியிருப்பு மனைப்பிரிவு சாலை அமைப்பு மற்றும் பொது ஒதுக்கீடு இடத்திற்கான வரைபடம் தொழில்நுட்ப அனுமதி எண். SWP/DTCP/ THOOTHUKUDI LAYOUT NO.153/2024 Planning Permission No.80/2024 என்று எண்ணிடப்பட்டு 05.10.2024 தேதியில் உறுப்பினர் செயலர்(பொ) தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழுமம் தூத்துக்குடி அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>வீட்டு வசதி (ம) நகர்ப்புறம் வளர்ச்சித்துறை அரசாணை எண் G.O.(Ms) No.181 நாள் 09.12.2020ல் குறிப்பிட்டுள்ளபடி மனைப்பிரிவு வரைபடத்தின்படி மனைப்பிரிவில் அமையும் சாலைக்குரிய இடம் மாநகராட்சிக்கு பொது ஒதுக்கீடு இடத்தினை மாநகராட்சிக்கு தானமாக பதிவுசெய்யப்பட்ட ஆவணம் எண்கள்.3912/2024 நாள்.03.10.2024 மற்றும். 3913/2024 நாள்.03.10.2024 உள்ளூர் திட்டக்குழுமத்தின் வழியாக ஆவணம் பெற்று மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுறிது<br>அலுவலக குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>எப்1/4274/2024 | 556)அலவலகக் குறிப்பு மாமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. |
| | 14) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் – பொதுநிதிதிட்டம் 2024–25ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி மாநாடுமையம் (Convention Centre)முதல்தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் குளிர்சாதனம் வசதி ஏற்படுத்தும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி 15.11.2024அன்று கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தபுள்ளி உறை 15.11.2024அன்று 3.30 மணிக்கு திறக்கப்பட்டது.<br>1. M/s. IJ Construction, Thoothukudi – நிறுவனம் மதிப்பீட்டைவிட 0.21% குறைவு(ரூ.50,07,430.00)<br>2. M/s. SM Thomaiyar& Son, Thoothukudi – நிறுவனம் மதிப்பீட்டைவிட 0.50% அதிகம் (ரூ.50,37,156.50) | 557)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கக் பட்டது. |

| | | |
|---|---|---|
| | 3. M/s.YUDEK Engineering Private Limited, Chennai – நிறுவனம் மதிப்பீட்டைவிட 15.91% அதிகம் (ரூ.58,16,029.00)<br>வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.21**% குறைவான தொகை ரூ.50,07,430.00 (GST நீங்கலாக) கொடுத்துள்ள M/s.IJ Construction, Thoothukudi, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. M/s.IJ Construction, Thoothukudi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்ற அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மதிப்பீட்டைவிட 0.21% குறைவாக கொடுத்துள்ள M/s.IJ Construction, Thoothukudi நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதை மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/4216/2024 | |
| | **15)** தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட தச்சர் தெரு மற்றும் தெற்கு காட்டன் சாலையில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு (உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு) ) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நான்கு மண்டலம் அறிவிப்பு பலகையில் **13.11.2024** அன்று வெளியிடப்பட்டு, **19.11.2024** (செவ்வாய்க்கிழமை) அன்று மாலை **2** மணி முதல் **3.00** மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை **3.30** மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் துணை ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.<br>**<u>வரிசை எண்.01</u>**<br>தெற்கு காட்டன் சாலையில் உள்ள **கடை எண்.3**க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. | **558)**அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது. |

| வ.எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. சி. ஜெயரூபன்<br>49B/4E, பொன்னகரம்<br>தூத்துக்குடி–2 | ரூ. 8,000/– | ரூ.8,200/– |
| 2. | திரு. M.K.M. செல்வம்<br>39D, சுந்தரராமபுரம்,<br>தூத்துக்குடி–2 | | ரூ.8,100/– |

**வரிசை எண்.02**

தெற்கு காட்டன் சாலையில் உள்ள **கடை எண்.14**க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி யில் குறிப்பிடப்பட்டு ள்ள மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. D. கார்த்திக் ராஜா<br>65, தந்தி ஆபிஸ் சாலை,<br>தூத்துக்குடி–2 | ரூ. 7,500/– | ரூ.7,600/– |
| 2. | திரு. மாரியப்பன்<br>107J/138A மில்லர்புரம்,<br>தூத்துக்குடி–8 | | ரூ.7,550/– |

அ) மேற்படி வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சி.ஜெயரூபன் என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.8,200/– உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. தெற்கு காட்டன் சாலை கடை எண்.3க்கு உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) மேற்படி வரிசை எண் 2ல் குறிப்பிட்டுள் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. D.கார்த்திக் ராஜா என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.7,600/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. தெற்கு காட்டன் சாலை கடை எண்.14க்கு உயர்ந்தபட்ச கேள்விதாரருக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

அ16/2380/2022

**16)** தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சிதம்பரநகர் வணிக வளாக கடைகளுக்கான குத்தகை உரிமத்திற்கு (உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நான்கு மண்டலம் அறிவிப்பு பலகையில் 13.11.2024 அன்று வெளியிடப்பட்டு, 19.11.2024 (செவ்வாய்க்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில்

559) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.

ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் துணை ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் **கடை எண்.F18**க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை (ரூ.) | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | திரு. J. சுரேஷ் ஜெயக்குமார் 1H/225, பால்பாண்டி நகர் 4வது தெரு, தூத்துக்குடி–8 | ரூ. 11,060/– | ரூ.11,075/– |
| 2. | திரு. R.கிங்ஸ்டன் 2G/268, ராஜீவ் நகர் 6வது தெரு தூத்துக்குடி–8 | | ரூ.11,060/– |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. J. சுரேஷ் ஜெயக்குமார் என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.11,075/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. கடை எண். F18க்கு உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

அ16/2822/2024

---

17) தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட பழைய பேருந்து நிலையம் பேறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கடைகளுக்கு (உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் நான்கு மண்டல அறிவிப்பு பலகையில் 13.11.2024 அன்று வெளியிடப்பட்டு, 19.11.2024 (செவ்வாய்க்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் துணை ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.

560) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.

**வரிசை எண்.01**

பழைய பேருந்து நிலையம் பேறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் **கடை எண்.F2**க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திருமதி. பாக்கிய லெட்சுமி<br>40, குமாரர் தெரு<br>தூத்துக்குடி –2 | ரூ. 2,604/– | ரூ.2,620/– |
| 2. | திரு. ஹரிஹர மூர்த்தி<br>98, மேலூர்<br>பங்களாதெரு<br>தூத்துக்குடி–2 | | ரூ.2,650/– |

அ) மேற்படி வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஹரிஹர மூர்த்தி என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.2,650/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது.

**வரிசை எண்.02**

பழைய பேருந்து நிலையம் பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் **கடை எண்.S6**க்கான உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திருமதி. த. பர்வதம்<br>143, மெயின் ரோடு<br>சாயர்புரம் –628251 | ரூ. 7,890/– | ரூ.7,950/– |
| 2. | திரு. நெல்சன் ரஞ்சித் குமார்<br>3/153-15, ஆசீர்வாதம் நகர் சாயர்புரம் –628251 | | ரூ.8,000/– |

ஆ) மேற்படி வரிசை எண் 2ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. நெல்சன் ரஞ்சித்குமார் என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.8,000/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது.

“அ” மற்றும் “ஆ” கடை எண்.F2 மற்றும் கடை எண்.S6 ஆகிய இரண்டு கடைகளுக்கும் உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

அ16/2943/2023

**18)** தூத்துக்குடி மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட பாளை ரோடு TMB காலனி அருகில் உள்ள டோபிகானா வளாகத்தில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள வணிக வளாக கட்டிடத்தில் உள்ள கடைகளுக்கு (உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நான்கு மண்டலம் அறிவிப்பு பலகையில் 13.11.2024 அன்று வெளியிடப்பட்டு, 19.11.2024 (செவ்வாய்க்கிழமை) அன்று மாலை 2 மணி முதல் 3.00 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஏலம் கோர எந்த நபரும் விண்ணப்பிக்காத நிலையில் மாலை 3.30 மணியளவில் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் துணை ஆணையர் அவர்களால் திறக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ளது.

561) அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப் பட்டது.

**<u>வரிசை எண்.01</u> : கடை எண்.G1**

| வ.எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. P. ஜானகிராமன் 2/149, வேளாங்கன்னி 7வது தெரு, அந்தோணிபுரம், தூத்துக்குடி. | ரூ. 4,500/– | ரூ.4,600/– |
| 2. | திரு. A. அழகுவேல் 62, அம்மன் கோவில் தெரு, சிதம்பர நகர், | | ரூ.4,550/– |

| | | | |
|---|---|---|---|
| | தூத்துக்குடி–8 | | |

<u>வரிசை எண்.02</u> : கடை எண்.G9

| வ.எண் | காப்புத்தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் (ம) முகவரி | மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகை ரூ. | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. M. சரவணன் 107J/138A, மில்லர்புரம் தூத்துக்குடி | ரூ. 4,500/– | ரூ.4,600/– |
| 2. | Zero Soft Technologics (R.Anand) 4A Toovipuram 11th Street Behind Sankara Narayanan Park, Thoothukudi-628003 | | ரூ.4,550/– |

அ) மேற்படி வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. P. ஜானகிராமன் என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.4,600/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது கடை எண். **G1**க்கு உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) மேற்படி வரிசை எண் 2ல் குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. M.சரவணன் என்பவரால் கோரப்பட்டுள்ள ரூ.4,600/–ம் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையானது மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆரம்ப மாத வாடகை தொகையை காட்டிலும் கூடுதலாக உள்ளது. கடை எண். **G9**க்கு உயர்ந்தபட்ச கேள்விதாரர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பாக மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

அ16/4033/2022

| | | |
|---|---|---|
| | 19) தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட வடக்கு மண்டலம் புதிய பேருந்து நிலையம் ஆம்னி பேருந்து நிலையம் அருகில் தரைத்தளத்தில் மேற்குபுறம் 11எண்ணம் கடைகள் புதியதாக கட்டப்பட்டுள்ளது. இக்கடைகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு இம்மாநகராட்சி வருவாயை பெருக்கும் வகையில் மேற்படி கடைகளை ஏலம் (ம) ஒப்பந்தபுள்ளி கோரும் நடவடிக்கைகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1. மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br>2. மேற்படி ஏலம் (ம) ஒப்பந்தபுள்ளி கோரும் அறிவிப்பு தொடர்பான விளம்பர செலவினங்களுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்<br>அ2024/4882/16 | 562) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப் பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 29–11–2024

மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி